அம்மா அவர்கள் ரேஷன் கார்டு கொடுத்து இருக்கிறார்கள். வெளியிலே 7, 8 ரூபாய்க்கு உலர் தீவனம் விற்கப்படுகிறது. ஒரு ரேஷன் கார்டுக்கு ஒரு கறவை மாட்டிற்கு 3 கிலோ உலர் தீவனம் 2 ரூபாய் என்ற விலையில் இங்கே விற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 125 தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பட்டா

***27464—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மணவிடுதி மற்றும் பெருங்களூர் கிராமம், போரத்தில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மணவிடுதி கிராமம், புல எண் 491, மொத்தப் பரப்பு 59.67.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் காடு புறம்போக்கு என உள்ளதாலும், பெருங்களூர் கிராமம் போரம் புல எண் 505 மொத்தப் பரப்பு 45.54.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் மேய்ச்சல்தளம் என உள்ளதாலும் மேற்கண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் அல்லல்களைத் தீர்க்க வாராது வந்த மாமணியாய், காலம் தந்த கொடையாக, இந்தியர்களின் நலன் காக்கும் படையாக, மக்கள் வாழ்வு மிளிர, ஒளிர, மகத்தான திட்டங்களை நாளும் நாளும் வாரி வழங்கும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேர்த்திமிகு அரியணையை அலங்கரிக்கும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 40, 50 ஆண்டு காலமாக அப்பகுதியிலே தொடர்ந்து குடியிருந்து வரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மக்களுக்கு பட்டா வழங்க வழியில்லை என்றாலும் one time scheme என்ற அடிப்படையில் மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் சிறப்பு நேர்வாக ஏதேனும் செய்ய வழிவகை உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய இடங்களில் உள்ள நபர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஒருமுறை வரைமுறைப்படுத்திய பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் மேற்கண்ட மக்கள் தாங்கள் அனுபோகத்தில் இருந்துவரும் மொத்த இடத்திற்கும் முழுமையாகப் பட்டா வழங்கக் கோருவதால் வழங்க இயலாத நிலை இருந்து வருகிறது. எனினும் மேற்காணும் நபர்களுக்கு தலா ஒரு ஏர்ஸ் வீதம் பட்டா வழங்க ஆய்வு செய்து விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒலியின் ஓசையாய், பொன்னான திருவடியாய், உழைப்பின் சிகரமாய் விளங்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், மனிதநேயமிக்க துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்கள் வாயிலாக நன்றியைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் போக்குவரத்து நிறைந்த மதுரை மெயின் ரோட்டில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை தற்போது மாற்றியமைப்பதற்காக மதுரை வத்தலகுண்டு ரோட்டில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். நிலம் கையகப்படுத்தியிருந்தால் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்கிற நிலையை மாற்றி, வடக்கு வாழ்கிறது தெற்கும் தலைமையேற்கிறது என்கிற நிலைமையை உருவாக்கிட (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் உரிமையை கேட்டுப்பெறுகின்ற இடத்தில் இருக்கும் மாண்புமிகு

2014 பிப்ரவரி 18]

அம்மா அவர்கள், இந்தியாவிற்கே வாரி வழங்கக்கூடிய நிலையை உருவாக்க செங்கோட்டையிலே நமது கொடி பறந்திடவேண்டும், செந்தமிழ்ச் சிறப்புகளை இயம்பிடவேண்டும், நாடு காக்கும் நல்வாய்ப்பு நம்வசம் வேண்டும். நற்றமிழ்த் தாய் பொற்கரத்தில் நாடு மலரவேண்டும், சீண்டுகின்ற சீனாவின் சிண்டு ஒடுக்கப்பட வேண்டும், வாலாட்டும் பாகிஸ்தானின் வால் அறுக்கப்பட வேண்டும், கொடுங்கோல் இலங்கையின் கொட்டம் அடக்கப்பட வேண்டும், கச்சத் தீவை மீட்டு வந்து கடல் உரிமையைக் காத்திடவேண்டும், கொடியவர் கூட்டத்தைக் கூண்டில் நிறுத்தவேண்டும், இதற்கு கோடி சிங்கத்தின் தைரியம் குடியிருக்கும் வீரத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) செங்கோட்டையிலே அமர்த்திடவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, சேலம் மாநகர், தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொண்டலாம்பட்டி பகுதி 54-வது கோட்டம், சண்முகநகர், ராஜமாரியம்மன் கோயில் பின்புறம், நத்தம் புறம்போக்குப் பகுதியில் 108 குடும்பத்தினர் குடும்ப அட்டை, மின் இணைப்பு, வாக்காளர் அடையாள அட்டை பெற்று 40 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலமாக இருப்பின் ஆய்வு செய்து அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*